அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.07/96

எனது இல.11/2/9/771(எச்)அ.ப.(1)
அரசாங்க நிருவாக,உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்,பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7
1996.04.01 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

## அரசியலில் பழிவாங்கப்பட்ட ஊழியர்களுக்கான நஉ்ட ஈட்டு நிதி

அந்தந்த அமைச்சுக்களினால் நியமிக்கப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல் ஆராய்வு குழுக்களினால் பழிவாங்கப்பட்டவர்களாக இனங்காணப்பட்டு நஉ்ட ஈட்டு நிதி அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்காக பின்வரும் நஉ்டஈட்டு நடைமுறையை அமுல்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இந்நடைமுறை 1995.09.20 ஆந் திகதி தொடக்கம் செயற்படும்.

### 1. 60 வயதுக்கு குறைந்த ஊழியர்கள்

1995.09.20 ஆந் திகதியில் 60 வயதுக்கு குறைந்த ஊழியர்கள் அவர்கள் எல்லா வேதன வேற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார்கள் என்பதையும் தன்னியக்க முறையில் பதவி உயர்வுகளை (தரத்திலிருந்து தரத்திற்கு) பெற்றுள்ளார்கள் என்பதையும் அடிப்படையாகக் கொண்டு அவ் ஊழியர்கள் அந்தத் திகதிக்குரிய சம்பளப் படி நிலைகளில் மீண்டும் சேவைக்கு அமர்த்தப்படுவதுடன் அத்தகைய ஊழியர்களுக்கு நிலுவையாகவுள்ள சம்பளங்களும் வழங்க வேண்டும்.

### 11. 60 வயதை கடந்துள்ள ஊழியர்கள்

1995.09.20 ஆந் திகதியன்று 60 வயதை கடந்துள்ள ஊழியர்கள் 60 வயது பூர்த்தியான திகதி தொடக்கம் ஓய்வு பெறவைக்க வேண்டும். அவர்கள் எல்லா வேதனவேற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார்கள் என்பதையும், தன்னியக்க முறையில் பதவி உயர்வுகளை (தரத்திலிருந்து தரத்திற்கு) பெற்றுள்ளார்கள் என்பதையும் அடிப்படையாகக் கொண்டு அவர்கள் ஓய்வு பெறும் திகதிக்கு ஏற்புடையதான சம்பள அளவுத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் மீளமைக்கப்பட வேண்டுமென்பதுடன், 60 வயது பூர்த்தியாகும் வரை நிலுவைச் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

### 111. ஓய்வு பெற்றோர்

அரசியல் பழிவாங்கல் குழுவின் சிபாரிசின் பேரில் மீண்டும் சேவைக்கமர்த்தப்படுகின்ற ஓய்வு பெற்றோரின் ஓய்வூதியம் மீண்டும் சேவைக்கமர்த்தப்பட்ட காலத்திற்குள் தடுத்து வைக்க வேண்டும். தன் விருப்பப்படி ஓய்வு பெற்றோருக்கு இது ஏற்புடையனவாகாது.

11/. மரணித்துவிட்ட ஊழியர்கள்

மரணித்துவிட்ட ஊழியர்கள் அவர்கள் மரணித்த திகதி அல்லது 60 வயது பூர்த்தியாகும் திகதியாகிய இரு திகதிகளில் முதல் வரும் திகதி வரை எல்லா வேதனவேற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார்கள் என்பதையும், தன்னியக்க முறையில் பதவி உயர்வுகளை (தரத்திலிருந்து தரத்திற்கு). பெற்றுள்ளார்கள் என்பதையும் அடிப்படையாகக் கொண்டு அவர்களின் சம்பளம் மீளமைக்கப்பட வேண்டுமென்பதுடன், அதன்படி நிலுவைச் சம்பளங்களும் வழங்கப்பட வேண்டும். விதவை, அநாதை ஓய்வூதியம் அதன்படி மீளமைக்கப்பட வேண்டும்.

1/. 60 வயதுக்கு குறைந்தவர்களும் மீண்டும் சேவைக்கு அமர்த்துவதை விரும்பாத ஊழியர்களும்.

அவர்கள் எல்லா வேதன வேற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார்கள் என்பதையும் தன்னியக்க முறையில் பதவி உயர்வுகளை (தரத்திலிருந்து தரத்திற்கு) பெற்றுள்ளார்கள் என்பதையும் அடிப்படையாகக் கொண்டு இவ் வகுதியைச் சேர்ந்த ஊழியர்களுக்கு அவர்களின் சேவையை முடிவுறுத்திய திகதி தொடக்கம் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படுகின்ற மீண்டும் சேவைக்கு அமர்த்தும் உத்தேசத் திகதியான 1995.09.20 ஆந் திகதி வரை சம்பளம் வழங்கப்படும்.

1/1: அமய/தற்காலிக நியமனங்களை வகித்த ஊழியர்கள்.

இவ் வகுதியைச் சேர்ந்த ஊழியர்களை மீண்டும் சேவைக்கமர்த்தப்படாததுடன், பொதுவான பணிக்கொடை போல் இருமடங்கு அவர்களுக்கு வழங்கப்படும். அதாவது- அவர்கள் இழந்த எல்லா 12 மாத சேவைக் காலத்திற்குமாக ஒரு மாத வேதனம் (சேவை இடைநிறுத்தப்பட்ட திகதி தொடக்கம் இந்தச் சலுகை செயற்படும் 1995.09.20 ஆந் திகதி வரை கணிக்கப்பட்டு) வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்டுள்ள வகுதியைச் சேர்ந்த ஊழியர்கள் மீண்டும் சேவைக்கு அமர்த்தப்பட வேண்டுமென்று அரசியல் பழிவாங்கல் குழு தீர்மானித்திருக்குமிடத்து, சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அவ்வாறு மீண்டும் சேவைக்கமர்த்த இடமிருப்பின், அந்தத் தீர்மானத்திற்கு இடமளிக்க வேண்டும்.

02. ஏதேனும் ஒரு அமைச்சின் அரசியல் பழிவாங்கல் ஆராய்வுக் குழுவொன்றினால் ஏதேனுமொரு ஊழியர் கோஉஷ்டிக்காக இதைவிட குறைந்த சலுகை சிபாரிசு செய்திருப்பின் அந்தக் குழுவின் சிபாரிசுகளை அதேபோல் செயற்படுத்த வேண்டும். அவ்வாறு நிச்சயமாக சிபாரிசு செய்திராத சந்தர்ப்பங்களில் மட்டும் இந்த நஉஷ்ட ஈட்டு முறையை ஏற்புடைதாக்கிக் கொள்ள வேண்டும்.

03. இந்தச் சுற்றறிக்கையில் உள்ளடங்கிய விடயங்களை சம்பந்தப்பட்ட அமைச்சின் அமைச்சரினதும் அரசியல் பழிவாங்கல் ஆராய்வுக் குழுவினதும் கவனத்திற்கு கொண்டு வருவதற்குரிய ஒழுங்குகளை செய்யுமாறு அமைச்சுக்களின் செயலாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.